ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2262/49 - 2022 ජනවාරි මස 15 වැනි සෙනසුරාදා - 2022.01.15

*2262/49 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு சனவரி மாதம் 15 ஆந் திகதி சனிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி IV(அ) - மாகாண சபைகள்

### மாகாண சபை அறிவித்தல்கள்

**சப்பிரகமுவ மாகாண மாகாண சபை**

சப்பிரகமுவ மாகாணத்தின் ஆளுநர் டிக்கிரி கோப்பேகடுவ ஆகிய நான், 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர் விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவுடன் வாசிக்க வேண்டிய 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 223 ஆம் பிரிவின் கீழ் விதிக்கின்ற கட்டளை

**டிக்கிரி கொப்பேகடுவ,**
ஆளுநர்,
சப்பிரகமுவ மாகாணம்.

ஆளுநர் அலுவலகம்,
சப்பிரகமுவ மாகாண சபை,
புதிய நகரம்,
இரத்தினபுரி.
2022 ஆம் ஆண்டு சனவரி மாதம் 13 ஆந் திகதி.

**கட்டளை**

சப்பிரகமுவ மாகாணத்திற்குப்பட்ட, மாவனெல்ல பிரதேச சபையின் தவிசாளரால் 2022 ஆம் ஆண்டிற்கான வரவு செலவு ஆவணம் 1987 ஆம் அண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 168 ஆம் பிரிவின் பிரகாரமும் 2012 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவனங்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 17 ஆம் பிரிவின் மூலம் திருத்தப்பட்ட 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 169 ஆம் பிரிவின் பிரகாரமும் ஒழுங்கு செய்து சபையில் சமர்ப்பித்து அங்கீகரித்துக் கொள்ளப்படாத காரணத்தினாலும் மேற்கூறிய 169 ஆம் பிரிவின் பிரகாரம் பணிகள் மேற்கொள்ளப்படாத காரணத்தினாலும் 2021.12.31 ஆந் திகதி தொடக்கம் தவிசாளரான ஹந்துன்குட்டி பேடிகே சந்தன குமார ஜயவந்தல என்பவர் தனது பதவியை இராஜினா செய்ததாகக் கருதப்படுவதுடன், அத் திகதி தொடக்கம் செயற்படும் வகையில் ஏற்புடைய சபையின் தவிசாளர் பதவி வெற்றிடமானதாகவும் கருதப்படல் வேண்டும்.

**சப்பிரகமுவ மாகாண மாகாண சபை**

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர் விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவுடன் வாசிக்க வேண்டிய 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் கீழ் எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் சப்பிரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ ஆகிய நான், பின்வரும் கட்டளையை விதிக்கின்றேன்.*

**டிக்கிரி கொப்பேகடுவ,**
ஆளுநர்,
சப்பிரகமுவ மாகாணம்.

ஆளுநர் அலுவலகம்,
சப்பிரகமுவ மாகாண சபை,
புதிய நகரம்,
இரத்தினபுரி.
2022 ஆம் ஆண்டு சனவரி மாதம் 13 ஆந் திகதி.

**கட்டளை**

சப்பிரகமுவ மாகாணத்திற்குட்பட்ட, உட்பட்ட, கேகாலை மாவட்ட எல்லைக்குள் அமைந்துள்ள மாவனெல்ல பிரதேச சபையின் 2022 ஆம் ஆண்டிற்கு ஏற்புடைய வரவு செலவு ஆவணத்தை 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 168 ஆம் பிரிவு மற்றும் 2012 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவனங்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 17 ஆம் பிரிவின் மூலம் திருத்தப்பட்ட 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 169 ஆம் பிரிவு ஆகிய பிரிவுகளின் ஏற்பாடுகளின் பிரகாரம் அங்கீகரித்துக் கொள்ள தவறியமையின் காரணமாக மாவனெல்ல பிரதேச சபையின் தவிசாளரின் பதவி மேற்கூறிய 169 ஆம் பிரிவின்படி வெற்றிடமாகின்றமையினால், 2012 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவனங்கள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டத்தின்படி அந்த பதவி வெற்றிடம் நிரப்பப்படும் வரை தவிசாளரின் பதவி வெற்றிடமான திகதி தொடக்கம் அப்பதவியின் அதிகாரங்கள், பணிகள் என்பனவற்றைச் செயற்படுத்தல் மற்றும் நிறைவேற்றுதல் ஆகிய பணிகள் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் கட்டளைச் சட்டத்தின் 8(4) ஆம் பிரிவின் பிரகாரம் உதவித் தவிசாளரிடம் ஒப்படைக்கப்படும் என்பதை இத்தால் அறிவிக்கின்றேன்.

மேலும் நியமனம் பெற்று வரும் உதவித் தவிசாளரால் 2022 ஆம் நிதியாண்டிற்கான வரவு செலவு ஆவணம் சபைக்குச் சமர்ப்பித்து உரிய முறையில் அங்கீகரித்துக் கொள்ளப்படும் வரையிலான கால எல்லைக்காக மாவனெல்ல பிரதேச சபையின் பணிகளை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வதை உறுதி செய்வதற்காக மாவனெல்ல பிரதேச சபையின் செயலாளரால் ஒழுங்கு செய்யப்பட்டு கேகாலை நிருவாக மாவட்டத்தின் உள்ளூராட்சி உதவி ஆணையாளரின் அனுமதியின்படி மாவனெல்ல பிரதேச சபையின் 2022 ஆம் ஆண்டிற்கு ஏற்புடைய மீண்டுவரும் செலவினங்கள் மற்றும் தற்போது செயற்படும் நிலையிலுள்ள விசேட கருத்திட்டங்களுக்குத் தேவையான செலவினங்களை மேற்கொள்வதற்காக நான் மாவனெல்ல பிரதேச சபையின் உதவித் தவிசாளருக்கு இத்தால் கட்டளை விதிக்கின்றேன்.

EOG *01-0155/ 1*

---

**சப்பிரகமுவ மாகாண மாகாண சபை**

*சப்பிரகமுவ மாகாணத்தின் ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ ஆகிய நான், 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர் விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவுடன் வாசிக்க வேண்டிய நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 225) 247 ஆம் பிரிவின் கீழ் விதிக்கின்ற கட்டளை.*

**டிக்கிரி கொப்பேகடுவ,**
ஆளுநர்,
சப்பிரகமுவ மாகாணம்.

ஆளுநர் அலுவலகம்,
சப்பிரகமுவ மாகாண சபை,
புதிய நகரம்,
இரத்தினபுரி.
2022 ஆம் ஆண்டு சனவரி மாதம் 13 ஆந் திகதி.

**கட்டளை**

*சப்பிரகமுவ மாகாணத்திற்கு உட்பட்ட, பலங்கொட நகர சபையின் தவிசாளரின் 2022 ஆம் ஆண்டிற்கான வரவு செலவு ஆவணம் பிரதேச சபைகள் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 255) 178 ஆம் பிரிவு மற்றும் 2012 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க*

*உள்ளூராட்சி நிறுவனங்கள் (விசேட எற்பாடுகள்) சட்டத்தின் 12 ஆம் பிரிவின் மூலம் திருத்தப்பட்ட நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 255) 178(அ) பிரிவு ஆகிய பிரிவுகளின்படி ஒழுங்கு செய்யப்பட்டு சபைக்குச் சமர்ப்பிக்கப்பட்டு அது அங்கீகரித்துக்கொள்ளப்படாமை காரணமாகவும் மேற்கூறிய 178(அ) பிரிவின் பிரகாரம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமையின் காரணமாகவும் 2022.01.14 ஆந் திகதி தொடக்கம் தவிசாளரான சமிக்க ஜயமிணி விமலசேன என்பவர் தனது பதவியை இராஜினாமா செய்ததாகக் கருதப்படல் வேண்டும் என்பதுடன், அத் திகதி தொடக்கம் செயற்படும் வகையில் ஏற்புடைய சபையின் தவிசாளரின் பதவி வெற்றிடமானதாகவும் கருதப்படல் வேண்டும்.*

### *சப்பிரகமுவ மாகாண மாகாண சபை*

*நகர சபைகள் கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 255)*

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர் விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவுடன் வாசிக்க வேண்டிய நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 255) கீழ் எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் சப்பிரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ ஆகிய நான், பின்வரும் கட்டளையை விதிக்கின்றேன்.*

**டிக்கிரி கொப்பேகடுவ,**
*ஆளுநர்,*
*சப்பிரகமுவ மாகாணம்.*

*ஆளுநர் அலுவலகம்,*
*சப்பிரகமுவ மாகாண சபை,*
*புதிய நகரம்,*
*இரத்தினபுரி.*
*2022 ஆம் ஆண்டு சனவரி மாதம் 13 ஆந் திகதி.*

### கட்டளை

*சப்பிரகமுவ மாகாணத்திற்குட்பட்ட, இரத்தினபுரி மாவட்டத்தில் அமைந்துள்ள பலங்கொட நகர சபையின் 2022 ஆம் ஆண்டிற்கான வரவு செலவு ஆவணம் நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 255) 178 ஆம் பிரிவு மற்றும் 2012 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவனங்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 12 ஆம் பிரிவின் மூலம் திருத்தப்பட்ட 178(அ) பிரிவு ஆகிய பிரிவுகளின் ஏற்பாடுகளின்படி அங்கீகரித்துக் கொள்ள தவறியமை காரணமாக பலங்கொட நகர சபையின் தவிசாளரின் பதவி மேற்கூறிய 178(அ) பிரிவின்படி வெற்றிடமாகின்றமையினால், 2012 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவனங்கள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டத்தின்படி அவ்வெற்றிடம் நிரப்பப்படும்வரை, தவிசாளரின் பதவி வெற்றிடமான திகதி தொடக்கம் அப்பதவியின் அதிகாரங்கள், பணிகள் என்பனவற்றைச் செயற்படுத்தல் நிறைவேற்றுதல் ஆகிய பணிகள் நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 255) 19(6) ஆம் பிரிவின் பிரகாரம் உதவித் தவிசாளரிடம் ஒப்படைக்கப்படும் என்பதை இத்தால் அறிவிக்கின்றேன்.*

*மேலும் நியமனம் பெற்று வரும் உதவித் தவிசாளரால் 2022 ஆம் நிதியாண்டிற்கான வரவு செலவு ஆவணம் சபைக்குச் சமர்ப்பித்து உரிய முறையில் அங்கீகரித்துக் கொள்ளப்படும் வரையிலான கால எல்லைக்காக பலங்கொட நகர சபையின் பணிகளை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வதை உறுதி செய்வதற்காக பலங்கொட நகர சபையின் செயலாளரால் ஒழுங்கு செய்யப்பட்டு இரத்தினபுரி நிருவாக மாவட்டத்தின் உள்ளூராட்சி உதவி ஆணையாளரின் அனுமதியின்படி பலங்கொட நகர சபையின் 2022 ஆம் ஆண்டிற்கு ஏற்புடைய மீண்டுவரும் செலவினங்கள் மற்றும் தற்போது செயற்படும் நிலையிலுள்ள விசேட கருத்திட்டங்களுக்குத் தேவையான செலவினங்களை மேற்கொள்வதற்காக நான் பலங்கொட நகர சபையின் உதவித் தவிசாளருக்கு இத்தால் கட்டளை விதிக்கின்றேன்.*

EOG *01-0155/ 2*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*